Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 194

வெள்ளிக்கிழமை
07 ஜூன் 2024

வைகாசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இப்பிடி அரண்,பரண் எண்டு நம்பித்தான் நடுத்தெருவில நிக்கிறம் பாருங்கோ"

# சமஷ்டித் தீர்வுக்கு இந்தியாவே அரண்

## சிறீதரன் வலியுறுத்து



புதுடில்லி, ஜூன் 7

ஈழத் தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ளதும் சமஷ்டி முறையிலுமான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்கவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார். 11



ஐ.நா. வதிவிடப்பிரதிநிதி

## கொக்குத்தொடுவாய் புதைகுழியில் ஆராய்வு!

முல்லைத்தீவு, ஜூன் 7

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் முல்லைத் தீவுக்கான பயணத்தை நேற்று மேற்கொண்டு 11

## வெளிநாட்டு மோசடி; யாழில் அதிகரிப்பு!

### பொலிஸார் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு விசா மோசடிகள் அதிகரித்துள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக வெளிநாட்டு 11

## நாகபூஷணி அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் காலை, இரவு என இரு நேரங்களிலும் சிறப்புப் பூசைகள் இடம்பெற 11

## ரணிலின் அலுவலகம் கொழும்பில் திறப்பு

கொழும்பு, ஜூன் 7

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகம் கொழும்பில் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியால் சுபநேரத்தில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### 6 மாதத்தில் மட்டும்

## யாழ்ப்பாணத்தில் 4,729 பேருக்கு டெங்கு

### இன்னும் பேராபத்தான நிலை தோன்றலாம்

### பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்தில் முதல் ஆறு மாத காலத்துக்குள் 4 ஆயிரத்து 729 பேருக்கு 11

## நீதிமன்றம் மீதான தாக்குதல் வழக்குத் தீர்ப்பு ஒத்திவைப்பு

மன்னார், ஜூன் 7

மன்னார் நீதிமன்றத்தின் மீது 2013 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு அடுத்த மாதம் 18 ஆம் திகதி தீர்ப்புக்காக ஒத்திவைக்கப் 11

## சுருக்குவலை மீன்பிடி 3 மீனவர்கள் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு கடற்பரப்பில், சுருக்குவலை மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தென்பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 11

### நல்லூர் ஆலயத்திருவிழா

## காளாஞ்சி கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் குரோதி வருட பெருந் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் 11

### அச்சுவேலி - உலவிக்குளம்

## ஆலயத்தின் உபதலைவரை வழிமறித்து கோடரி வெட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 7

அச்சுவேலி - உலவிக்குளம் ஆலய உப தலைவர் தனது தொழில் நிமித்தமாகச் சென்றுகொண்டிருந்தபோது, அவரை மேற்படி ஆலயத்துக்கு முன்பாக இடைமறித்த ஐவர் அடங்கிய குழுவினர் அவர் மீது கோடரியால் வெட்டித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். 11



## மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டவரைவு நிறைவேற்றம்

### மஹிந்தவும் ஆதரவு

கொழும்பு, ஜூன் 7

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் மின்சாரசபை மறுசீரமைப்பு சட்டவரைவு 44 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மன்றில்

## ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை

## பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்

### அறிவோர் ஒன்றுகூடும் அரசியற் கருத்துக் களம்

**நிகழ்ச்சி நிரல்**

அகவணக்கம்

ஈகச்சுடரேற்றல்

*வரவேற்புரை*

**திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்**
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

*தலைமையுரை*

**கௌரவ சி.வி.கே. சிவஞானம்**
(பேரவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)

*தொடக்கவுரை*

**பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன்**
(சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)

*கருத்துரைகள்*

**சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

**மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்**
(முன்னாள் அமைச்சர், வடக்கு மாகாண சபை)

**திரு. சபாபதி சுப்பையா குகநாதன்**
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)

**ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்**
(பாராளுமன்ற உறுப்பினர்)

*நிறைவுரை*

**பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை**
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

*நன்றியுரை*

**திரு.இம்மானுவல் தயாளன்**
(சமூக செயற்பாட்டாளர்)

*நிகழ்ச்சித் தொகுப்பு*

**சட்டத்தரணி கேசவன் சயந்தன்**
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

**இடம் : தந்தை செல்வா கேட்போர்கூடம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

**காலம்: 2024.06.09, ஞாயிற்றுக்கிழமை**

**நேரம்: பி.ப. 2 மணி 59 நிமிடம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


யாழ்.போதனா மருத்துவமனையில்

# மதகுருமார், கர்ப்பிணிகளுக்கு முன்னுரிமை வழங்க அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.போதனா மருத்துவமனையில் அனைத்துச் சிகிச்சை நிலையங்களிலும், மருந்து வழங்கும் நிலையங்களிலும் மதகுருமார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், விசேட தேவையுள்ளவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுமாறு, மருத்துவமனையின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய, யாழ்.போதனா மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை முதல் குறித்த செயன்முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (ப-66)



# அறநெறிப் பாடசாலை ஆரம்பிப்பு

இலங்கை சைவத்தமிழ் மன்றத்தால் சாஸ்திரிகூழாங்குளம் கட்டையர்குளம் கிராமத்தில், புதிதாக அறநெறிப் பாடசாலை ஒன்று, கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

சாஸ்திரிகூழாங்குளம் கிராமஅலுவலர் நா.ஸ்ரீதரனின் வேண்டுகோளுக்கமைய அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை சைவத்தமிழ் மன்ற நிர்வாகிகள், கிராம அலுவலர், ஆலயத் தலைவர், அறநெறி ஆசிரியர், ஆலய நிர்வாகத்தினர், அறநெறி மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-110)


# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 • 06 • 1939

மறைவு 29 • 05 • 2014

## அமரர் நாகலிங்கம் செல்லத்துரை

உண்மையில் ஒரு தந்தையின் இழப்பு என்பது
எதனாலும் ஈடு செய்ய முடியாத ஒன்று.
அப்பாவின் மரணத்துக்குப் போகும் பாக்கியம் கூட
எனக்குக் கொடுத்து வைக்கவில்லை.
அவர் இல்லாத காலங்களை எல்லாம் நினைத்தால்
தந்தை என்ற பாத்திரம் வகிக்கும் பங்கு புரியும்.
எப்பவும் நினைப்பதுண்டு அப்பா இருந்தால் எப்படி இருந்திருப்பேன் என்று.
என்னால் இன்னும் நம்ப முடியவில்லை அவரின் இழப்பை.

16/1, கனகரத்தினம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

மகள் - லாவண்யா (சூட்டி)
பேரப்பிள்ளைகள்.

(CS/55274) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் மன்னிப்பு அரசமைப்புக்கு எதிரானது

## உயர்நீதிமன்றம் தீர்ப்பு

**கொழும்பு, ஜூன் 7**

**ராஜகிரிய, றோயல் பார்க் கொலைச் சம்பவத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் ஷமந்த ஜயமஹா என்ற பிரதிவாதிக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம் அரசமைப்புக்கு எதிரானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

பிரதிவாதியை விடுவித்து முன்னாள் ஜனாதிபதி வழங்கிய ஜனாதிபதி மன்னிப்பு செல்லுபடியற்றது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மைத்திரிபால சிறிசேன 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

அதேநேரம், பாதிக்கப்பட்ட யுவதியின் தாய் மற்றும் தந்தைக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேனவுக்கு மற்றுமோர் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுமென்றே அரசமைப்பை மீறியுள்ளார் என்று தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், தற்போது வெளிநாட்டில் உள்ள பிரதிவாதியை உள்நாட்டு மற்றும் சர்வதேச சாசனங்களைப் பயன்படுத்தி இலங்கைக்கு அழைத்துவர தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (எ-இ)

# இலங்கையில் அதிகரிக்கும் எச்.ஐ.வி. தொற்றாளர்கள்

கொழும்பு, ஜூன் 7

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் 200க்கும் அதிகமான எச்.ஐ.வி. தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும், 13 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் 207 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 25 வீத அதிகரிப்பைக் காட்டுகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாளர்கள் அதிகரிப்பதற்கான காரணங்களாக பரிசோதனைத் திறன் விரிவாக்கம், பாலியல் கல்வி மற்றும் ஆபத்தான பாலுறவு நடத்தை தொடர்பாக மக்களிடையே உள்ள மோசமான அறிவு மற்றும் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமை போன்ற காரணங்கள் மருத்துவர்களால் முன்வைக்கப்படுகின்றன. (எ-இ)

# ஒரு கோடி ரூபா பெறுமதியான இஞ்சி மீட்பு

கொழும்பு, ஜூன் 7

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டுக்கு சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் ஒரு தொகை இஞ்சி, நுரைச்சோலை இலந்தையடி கடற்பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது. 29 மூடைகளில் ஆயிரத்து 456 கிலோ கிராம் இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதன் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# தானிய இறக்குமதி இனிமேல் தாராளம்

குறிப்பிட்ட சில தானியங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதனால் தானியங்களை இனிமேல் தாராளமாக இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. உளுந்து, கௌபி, திணை, கச்சான், சோயா ஆகிய தானியங்களுக்கே இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்குவது நீக்கப்படவுள்ளது. சந்தையில் இந்தத் தானியங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர் என நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-6)

# 'ஸ்டார் லிங்க்' இணையசேவைக்கு அனுமதி

எலான் மஸ்க் தனது செயற்கைக்கோள் அடிப்படையிலான இணையசேவைகளை 'ஸ்டார் லிங்க்' இலங்கையில் ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனை அறிவித்துள்ளார். உரிய வகையில் பொதுமக்கள் கருத்தறியப்பட்டதன் பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# ஜூலை மாதம் முதல் மின்கட்டணக் குறைப்பு



கொழும்பு, ஜூன் 7

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வீட்டுப் பாவனை மின் நுகர்வோருக்கு மேலும் நிவாரணம் வழங்கப்படும் என்றும், இந்த முன்மொழிவுக்கு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

30 க்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 8 ரூபாவிலிருந்து 6 ரூபாவாகவும், 30-60 அலகுகளுக்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 20 ரூபாவிலிருந்து 9 ரூபாவாகவும், 60-90க்கு இடைப்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 30 ரூபாவிலிருந்து 18 ரூபாவாகவும், 90-180 அலகுக்கு உட்பட்ட அலகு ஒன்றின் கட்டணம் 50 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# பதினம் தெரியுமோ?

**ஒற்றைத் திருக்கல் வண்டில்ல ரண்டு மாட்டைப் பூட்டினால் என்ன நடக்குமோ அதுதான் இப்ப யாழ்ப்பாணக் கச்சேரியிலையும் நடந்து கொண்டிருக்குது. முதல் இருந்த 'ஜீ.ஏ' பென்சனில போய் நாலு மாதமாகப் போகுது. ஆனால் இன்னும் நிரந்தரமா ஒராளை அந்தப் பதவிக்குப் போடாமல் அரசாங்கம் இழுத்தடிச்சபடி இருக்குது.**

**'புதிசா ஒராளை அந்தப் பதவிக்குப் போட்டால், இப்ப பதில்கடமை பாக்கிறவர் கோபிப்பார். அதாலதான் போடேலை' எண்டு தியேட்டர்கார அமைச்சர் சொல்லிக்கொண்டு திரியிறார். அந்தளவுக்கு அமைச்சரின்ர செல்லப்பிள்ளையா இந்தப் பதில் கடமைப் பயில்வான் மாறிட்டார். பகிடி என்னெண்டால், இதே பதில்கடமை செய்யிறவர் சில வருசங்களுக்கு முந்தி, ஆட்டையைப்போட்ட அழுல்பேபியோட சேர்ந்து போட்ட ஆட்டம் கொஞ்ச நஞ்சமில்லை. அப்ப தியேட்டர்கார அமைச்சருக்கு இந்தப் பதில்கடமை பயில்வான் வைச்ச ஆப்புகளுக்கும் அளவில்லை. ஆனால் ஆட்சிமாற, காட்சியும்மாறி, கட்சி மாறிட்டார் இந்தப் பதில் கடமை பயில்வான். இப்ப என்னெண்டால், பதில்கடமை பயில்வான் நிர்வாகத்துக்குப் பொறுப்பா இருக்க, காணிக்கு மோகனமான இன்னொருத்தர் தான் பொறுப்பு. கிட்டத்தட்ட ரண்டு பேரும் ஒரே தகுதிநிலை எண்டதால, எப்ப பார்த்தாலும் 'நீ பெரிசோ? நான் பெரிசோ?' எண்ட போட்டிக்கு பஞ்சமில்லை.**

**இப்ப ரண்டுபேரைப் பற்றியும் மீடியாக்களில தொடர்ந்து செய்தி வாறதால, 'என்னைப் பற்றி அவர்தான் இப்பிடிச் செய்தி குடுத்திருக்கிறார்' எண்டு ரண்டுபேரும் ஆளையாள் நேருக்கு நேராக் குற்றம் சாட்டத் தொடங்கிட்டினமாம். போனமுறை ரணில் வந்து ஒட்டகப்புலத்தில காணி கையளிக்கேக்க, இந்த ரண்டு பேருக்கும் போனில கடும் சண்டையாம். காணிக்குப் பொறுப்பானவர் போனில கத்தின கத்தில அங்க காவலுக்கு நிண்ட ஆமிக்கே ஹார்ட் அட்டாக் வந்திட்டாம். அந்தளவுக்கு ரண்டு பேரும் கீரியும் பாம்புமா இருந்தாலும், ரண்டுபேருமே தியேட்டர்கார அமைச்சருக்கு முன்னால பால்குடிக் குழந்தையள் மாதிரி நிப்பினமாம். ரண்டு பேரும் தங்களுக்குள்ள கொளுவுப்பட்டுப்போட்டு, உடனேயே அமைச்சருக்குப் போன்பண்ணி 'அவன் இப்பிடிச் சொல்லுறான், இப்பிடிச் செய்திட்டான்' எண்டு முறைப்பாடு செய்யாட்டி பதில்கடமை பயில்வானுக்கு பத்தியப்படாதாம். இந்த முறைப்பாட்டைக் கேட்டுக் கேட்டு களைச்சுப்போன அமைச்சர், கடைசியா தியேட்டருக்கு ரண்டு பேரையும் கூப்பிட்டு, 'இனிமேல் ரண்டு பேரும் அடிபடாமல் அச்சாப்பிள்ளையளா இருக்கோணும்' என எண்டு சொல்லி அனுப்பி இருக்கிறாராம். வெளியில 'சண்டை சமாதானம்' எண்டமாதிரி ரண்டுபேரும் சிரிச்சுக் கையைக் குடுத்தாலும், உள்ளுக்க இப்பவும் புகைஞ்சு கொண்டுதான் இருக்கினம் எண்டு விசயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம்.**

\- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் வெற்றியை சுவைத்தது உகண்டா




ரி - 20 உலகக்கிண்ணத் தொடரின் 9 ஆவது ஆட்டத்தில் பப்புவா நியூகினியை 3 விக்கெட்டுகளால் வெற்றிகொண்ட உகண்டா, தனது முதலாவது உலகக்கிண்ண வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உகண்டா முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பப்புவா நியூகினி 19:1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. இந்த ஆண்டு ரி- 20 உலகக் கிண்ணத் தொடரில் பெறப்பட்ட மிகக் குறைந்த மொத்த எண்ணிக்கை இதுவாகும். தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கையும் 77 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

78 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய உகண்டா பெரும் சிரமத்துக்கு மத்தியில் 18:2 பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (ஏ)

# ஓமானை வீழ்த்தியது ஆஸி.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 10 ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியா அணி ஓமானை 39 ஓட்டங்களால் வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஓமான் முதலில் களத் தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. ஸ்ரேனிஸ் 36 பந்துகளில் 67 ஓட்டங்களையும், வோர்னர் 51 பந்துகளில் 56 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர். 165 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஓமான் சிறப்பான போராட்டத்தை வெளிப்படுத்தியது. 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்ற ஓமான் அணி 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ஏ)

# உதவிப் பொருள்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்தை நோக்கி பாதயாத்திரையை முன்னெடுத்துள்ள பாதயாத்திரைக் குழுவினருக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் ஒரு தொகுதி உதவிப்பொருள்கள் திருகோணமலையில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன. (எ-25,66)

# சின்னம் சூட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் நா. கண்ணதாசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஐ.தேவஈஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கரம்பைக்குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.சுதாகரும், கௌரவ விருந்தினராக சிரேஷ்ட பழைய மாணவர் இ.செல்லத்தம்பியும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-25,159)

# சிறந்த பொறிமுறையின்கீழ் புலம்பெயர் உறவுகள் நிதியுதவி

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7

புலம்பெயர் உறவுகள் சிறந்த பொறிமுறையின்கீழ் நிதியுதவிகளை மேற்கொள்ளுதல் சிறப்பாக அமையும் என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் அதிகம் தேவைப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார். புலம்பெயர் உறவுகள், வடக்கிலுள்ள தொழில்முனைவோருக்கான ஒத்துழைப்புகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். சிறந்த பொறிமுறையின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் தேவை எனவும் அவர் இதன்போது வினவினார். மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்படவேண்டும் எனவும், இதற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது அவசியம் எனவும் ஆளுநர் கூறினார். அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின்கீழ் செயற்படும் சர்வதேச அமைப்புகள் வடக்கில் இதுவரையில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்த ஆளுநர், அனைத்துத் துறைகளுக்குமான அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்பு [illegible]

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பணவரவும் திருப்தி தரும். எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். முருகப் பெருமானை வழிபடுவது நன்று.

**இடபம்:** சின்னச் சின்னத் தடங்கல்கள் ஏற்பட்டாலும் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். பணிச்சுமை அதிகரிக்கும்.

**மிதுனம்:** சாதகமான நாள் என்றாலும் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். அந்நியோன்யம் அதிகரிக்கும். உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**கடகம்:** வெளிவட்டாரத்தில் சின்னச் சின்ன பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. உறவினர்களால் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** நாள் முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிறு சங்கடங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்புக் கரையும். பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டு. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையும். தேவையற்ற சில பிரச்சினைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பணியாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவும். சங்கடங்கள் குறையும். உற்சாகமாக இருப்பீர்கள்.

**மகரம்:** பணிச்சுமை குறையும். எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** எதிர்பார்த்த இடத்தில் பணம் கிடைக்கும். செயல்களும் அனுகூலமாக முடியும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும்.

**மீனம்:** தொடங்கும் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். பணிச்சுமை அதிகரித்தாலும் உங்கள் பணிகளை சக ஊழியர்கள் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வருகைகளின் பின்னுள்ள மர்மம்

தமிழர் தாயகத்தில் 1995 க்கு முன்னர், வான் பரப்பில் அடிக்கடி 'ஸீ-பிளேன்' வட்டமிட்டபடி இருக்கும். ஆனால் மக்கள் இந்த விமானத்தைப் பற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. 'நொய்ங்ங்க்க்க்'என்று விண் கூவுவதைப் போல ரீங்காரமிட்டபடி பறந்து திரியும், 'ஸீ-பிளேன்' குண்டுகளை வீசுவதில்லை, துப்பாக்கிப் பிரயோகமும் செய்வதில்லை. சிலவேளைகளில் எப்போதாவது இராணுவத்தின் துண்டுப்பிரசுரங்கள் விசிறப்படுவதுண்டு. ஆனால், தமிழ்மக்கள் கண்டுகொள்ளாமல் இருந்தாலும் கூட, 'ஸீ-பிளேனின்' பறப்பால் ஏற்படும் விபரீதம் அடுத்தடுத்த நாள்களிலேயே தெரியவரும். எங்கெல்லாம் புலிகளின் நிலைகள் , முகாம்கள், நடமாட்டம் இருக்கின்றதென அவதானித்து, உளவு சொல்வதே 'ஸீ-பிளேனின்' முதன்மைப் பணியாக இருந்தது. அந்த உளவுத்தகவல்களை வைத்தே விமானக் குண்டுவீச்சு நிகழும், எறிகணைகள் ஏவப்படும். இறுதிப்போர்க் காலத்தில் 'ஸீ-பிளேன்' செய்த வேலையை 'வண்டு' என அழைக்கப்பட்ட ஆளில்லா விமானங்கள் செய்தன. தேர்தல்காலம் நெருங்குவதால், இந்த உளவு விமானங்களைப் போல, சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ்மக்களின் நாடி பிடித்துப் பார்க்க, வடக்குக்கு அடிக்கடி வரத் தொடங்கியிருக்கின்றனர்.

முதலில் தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார வந்தார், பின்னர் ஜனாதிபதி ரணில் வந்தார், இப்போது சஜித் வரப்போகிறார், அவரைத் தொடர்ந்து மீண்டும் வடக்கே வருவதற்கான ஏற்பாடுகளை அநுரகுமாரவும் முன்னெடுத்துள்ளார். இம்முறை ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இந்த மூவருமே பிரதான வேட்பாளர்களாக இருக்கப்போகின்றனர். கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களில் இருமுனைப் போட்டியே நிலவியிருந்தது. அதனால் தென்னிலங்கை வாக்காளர்கள் யாரை ஆதரிப்பதென முடிவெடுப்பதும் சுலபமாக இருந்தது. ஆனால் இம்முறை பலமான மும்முனைப்போட்டி ஏற்படப்போவது உறுதியாகிவிட்டது. இது தென்னிலங்கை வாக்காளர்களிடம், யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பாக இறுதிவரை முடிவெடுக்கமுடியாத குழப்பத்தை உண்டுபண்ணும். அத்தோடு சிங்கள மக்களின் வாக்குகள் மூன்று கூறுகளாகப் பிரியும். எனவேதான், சிறுபான்மை மக்களின் வாக்குகளை எப்படியாவது தம்பக்கம் திருப்பி விட்டால், வெற்றியை எட்டிவிடலாம் என்ற கணக்கோடுதான் வடக்கை நோக்கி இந்த மூன்று சிங்கள அரசியல் தலைவர்களும் 'ஸீ-பிளேன்' போல வட்டமடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அவர்களின் இந்த மனக்கணக்கில் மண்ணள்ளிப் போடுவது போல, பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு தமிழ் மக்களிடையே விஸ்வரூபமெடுத்து , பல தரப்புகளின் ஆதரவும் அதற்குப் பெருகத் தொடங்கியுள்ளது. பொதுவேட்பாளர் ஒருவரை தமிழ்த் தரப்பு முன்னிறுத்தினால், தமிழ் மக்களின் பெரும்பாலான வாக்குகள் அந்தப் பொதுவேட்பாளருக்குக் கிடைத்தால் இந்த மூன்று சிங்களத் தலைவர்களின் கதியும் இலவு காத்த கிளியின் கதையாகிவிடும். எனவே இந்தப் பொது வேட்பாளர் என்ற விடயத்தைக் கருவிலேயே சிதைத்து விடும் நோக்கமும் அவர்களின் இந்த வடக்குக்கான வருகைகளின் பின்னால் ஒளிந்திருக்கின்றன. தமிழ் மக்கள் மீது தாம் அக்கறை கொண்டவர்கள் என்றும், தாம் அதிகாரத்துக்கு வந்தாலேயே தமிழ் மக்களுக்கு சலுகைகளை வழங்கமுடியும் என்றும் போலியான விம்பங்களை ரணில், சஜித், அநுரகுமார ஆகிய மூவரும் கட்டமைக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த தங்களின் திட்டம் என்ன என்பது குறித்து மிகச் சாதுரியமாக இந்த மூவரும் வாயே திறப்பதில்லை. அவர்களின் திட்டமெல்லாம் ஆட்சிக்கதிரையில் அமர்வது மாத்திரமே தவிர தமிழ்மக்களின் பிரச்சினைகளை முந்திய தலைவர்கள் போல 'அதோ தீர்க்கிறோம், இதோ தீர்க்கிறோம்' என இழுத்தடிப்பதுதான். எனவே இந்தச் சிங்களத் தலைவர்களுக்கு பாடம் புகட்டவும், சர்வதேசத்துக்கும், சிங்கள மக்களுக்கும் எமது அபிலாஷை பற்றிய செய்தியை வெளிப்படுத்தவும் நமக்கிருக்கும் ஒரேயொரு துருப்புச் சீட்டு பொது வேட்பாளர் மட்டுமே. அதைத் தவறவிடுவோமானால், மீண்டும் செக்குமாடுகள் போல அதே பேச்சுவார்த்தை, வாக்குறுதி, ஒப்பந்தம், இழுத்தடிப்பு என தமிழினம் ஏமாற்று வட்டத்திலேயே சுற்றிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.




# ஐ. ம.ச. கூட்டணியில் இணையும் எம்.பி.க்கள்

**கொழும்பு, ஜூன் 7**

**நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, சரித ஹேரத் ஆகியோர் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைவர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

இதற்கான பேச்சு வெற்றியளித்துள்ளது எனவும், விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் ரணசிங்க, தயாசிறி ஜயசேகர ஆகியோரும் சஜித் கூட்டணியில் இணைவதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ச-44)



# ரணிலுக்கு விமல் ஆதரவு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவுக்குப் பலம் வாய்ந்த அமைச்சுப் பதவியை வழங்குவதற்கான கலந்துரையாடல் நடந்துவருகின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்கள் இருவர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அந்த இரு உறுப்பினர்களும் ஏற்கனவே தீர்மானித்துள்ளனர் என்றும், அதற்கு விமல் வீரவன்ஸ இணக்கம் தெரிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (எ-இ)

# அஹ்னாப் ஜசீமின் பெயர் நீக்கம்

கொழும்பு, ஜூன் 7

மன்னாரமுது அஹ்னாப் என நன்கு அறியப்பட்ட கவிஞரும் ஆசிரியருமான அஹ்னாப் ஜசீமின் பெயரை, பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்கள் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'நவரசம்' என்ற கவிதைத் தொகுப்பின் ஊடாக அடிப்படைவாதத்தை போதனை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு, 2020ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி பண்டாரவேலியில் உள்ள தனது வீட்டில் கைது செய்யப்பட்ட அஹ்னாப் ஜசீம், சர்வதேச மனித உரிமைக் குழுக்களின் ஆட்சேபனைகள் இருந்தபோதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 579 நாள்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

நீதிமன்றத்தால் அவர் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்ட பின்னரும், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர் என இலங்கை அரசாங்கத்தால் பட்டியலிடப்பட்டிருந்தார். (எ-இ)

# வீழ்ச்சியடைந்துள்ள மாணவர் சேர்க்கை!

கொழும்பு, ஜூன் 7

தரம் ஒன்றுக்கான மாணவர் சேர்க்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிறப்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளதால் தரம் ஒன்றுக்கான மாணவர் சேர்க்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்காலத்தில் தரம் ஒன்று மாணவர் சேர்க்கை மேலும் வீழ்ச்சியடையும் நிலைமையே இருக்கின்றது - என்றார். (எ-இ)

# நாடாளுமன்றம் செல்வதை எதிர்பாராத அத்துரலிய



மீண்டும் நாடாளுமன்றம் செல்வதற்கு எதிர்பார்க்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

அரசியல் செய்வதற்கு நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என அவசியமில்லை. மக்களுடன் இருந்து அரசியல் செய்யலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

## நாளை

08.06.2024

**சனிக்கிழமை**

**வைகாசி - 26**

சுபநேரம் : 02.52 - 04.22


ராகுகாலம் : 09.52 - 10.22

## நாளொரு நல்வார்த்தை

**புகழின் பின்னால் நீ போனால் அது பொய்மான். உன் பின்னால் புகழ் வந்தால் அது நிஜமான் அப்போது தான் நீ அதற்கு எஜமான் -வைரமுத்து-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்



### வரணி மத்திய கல்லூரி

**Bio Science**

சி.வசிகா- 3ஏ, ர. கோபிரம்மியா- ஏசிஎஸ், ர. ஜமீனா-2சிஎஸ், த.கார்த்திகன்- 3எஸ்.

**Physical science**

ஜீ.அதிசயா- 3ஏ, ரா.தசஜினன்- 3ஏ, ரா.துளசிதரன்- ஏ2பி, வே. ஜிந்துஷா- பி2சி, சூ.வேணுசன்- பி2சி, து.அக் ஷனா- 3எஸ், உ.தரணிகா- சிஎஸ்.

**கலைப்பிரிவு**

வி.ஜனுஜா- 3ஏ, கோ.ஆஷா- 3ஏ, க.ராகவி- 3ஏ, ச.விதுஷா- 3ஏ, செ.நிமேஷா- 2ஏபி, மி.சுபேதிகா- 2ஏபி, த.கேதியா-2ஏபி, வி.வின்சா- 2ஏசி, ஜெ.சயந்தினி- ஏ2பி, சி.டிலக்சனா- ஏபிசி, வ.வர் மிகா- 2பிசி, ச.துஷிதா- ஏ2சி, ம.அபினா- ஏசிஎஸ்.

### யா/ஸ்கந்தவரோதய கல்லூரி

**கலைத்துறை**

ஜே.சாருஜன்- 3ஏ, கே. தேனுசன் - ஏபிசி, எஸ். திலக்சன் - 2ஏசி, ஜீ. காணுஜன் - 2பிசி, ந. சஞ்சய் - ஏ2பி, ச. மிலக் ஷா - ஏ2சி, நி. ரம்யா - 2ஏபி, த. பிரியந்தா 2ஏபி

ஆ. கர்ஷிகா - ஏபிசி, ஆ. கர்ணிஹா - ஏபிசி , ஸ்ரீ. தர்ஷனா - ஏபிஎஸ், அ. லக் ஷனி - ஏ2எஸ், வி. கேதுஜா - 3ஏ, சு. நிஜா - ஏபிசி, வி. அபிராமி - 2ஏபி, சி. லத்திகா - 2ஏபி, சு.சாய்விகாஷினி - ஏ2பி, சி. பார்கவி - 2பிசி, து. யதுஷனா - 2ஏபி, சு. கீர்த் தனா - 2பிசி, வ. கேணுகா - ஏ2சி, உ. லோஜிகா - 3ஏ, தே. சங்கவி - 3பி, கு. பிரவீனா - ஏ2சி, பெ. திருஷா - ஏ2பி.

### சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

**விஞ்ஞானப்பிரிவு**

ஆர்.சீபா- ஏ2பி, எம்.நித்திகா - 3எஸ்

**வர்த்தகப் பிரிவு**

எஸ்.கோகில்ராஜ்- பி2சி.

**கலைப்பிரிவு**

எஸ்.ரிஷிபா- 2ஏபி, ஆர்.சர்மிளா- ஏபிசி, பி.கஜீபா - ஏ2சி, பி.போகினி - 2பிசி, ஜெ.மஜீபன்- பி2சி, எஸ்.மதுசா - ஏ2எஸ், எஸ்.நிசாந்தினி - பிசிஎஸ், எஸ்.சுபானு- பி2சி, எஸ்.நிருஜா - பிசிஎஸ் , என். சஞ்சயன்- பிசிஎஸ், ரி.தர்மிகா- பி2எஸ்.

### கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

**Bio science**

வி.தனுஷ்- 2ஏபி, ஆர்.சுபிதா- பிசிஎஸ்.

**Physical science**

எல்.கஜானி- 2ஏபி

**Engineering technology**

வி.ஹம்சி - 3சி, எஸ்.கோபிராஜ்- 2சிஎஸ், வை.சேந்தன்- 2சிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு**

எஸ்.லிஸ்திகா- 3எஸ்

**கலைப்பிரிவு**

ஆர்.டில்சன்- 3ஏ, எஸ்.அபிநயா- 3ஏ, வி.கிரிசா- 3ஏ,எம்.மதுசா- 3ஏ, ஜே. நிதுஷா - 3ஏ, என்.மதுசிகா- 3ஏ, எம். குகேந்தினி - 3ஏ, எஸ். ஷபினா- 2ஏபி, ஆர்.செந்தூரி- 2ஏபி, எஸ்.சிந்துஜா- 2ஏபி, எஸ்.ஜனுசிகன்- ஏ2பி, எஸ். கஜீபனா- ஏ2பி, யு. நிருஷா- ஏபிசி, பி.கிரிஷா- பி2சி, பி.கிரிசாந்- பிசிஎஸ், ஜே.உகர்ஞா- 2சிஎஸ், ரி.சுஜீபன்- சி2எஸ், வி.விதுசா- சி2எஸ், ஆர். ஆகாஸ்- சி2எஸ், எம்.வித்தகி- 3எஸ்.

(ச-9-159)

## சா/ த பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஒத்திவைப்பு

கொழும்பு, ஜுன் 7

சாதாரண தரப் பரீட்சை 2023 (2024) விடைத் தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியில் பரீட்சார்த்திகள் மதிப்பீட்டு நிலையங்களுக்குச் செல்வதில் ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். (ச)

## பணிப்புறக்கணிப்பால் தவறும் புலமைப்பரிசில்

*சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டு*

யாழ்ப்பாணம், ஜுன் 7

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பு றக்கணிப்புக் காரணமாக மாணவர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்கமுடியாத அவல நிலை தோன்றியுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது சீன அரசாங்கத்தினதும், அமெரிக்க அர சாங்கத்தினதும் புலமைப்பரிசில்களுக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பு றக்கணிப்பு காரணமாக மாணவர்கள் சான்றிதழ் களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படு கிறது. அரசாங்கம் நடைமுறையிலுள்ள சட்டங்களை பயன்படுத்தி பணிப்புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள் ளார். (எ-25,6)

## சமூகவலைத்தளங்களில் பெறுபேறு வெளியிடாதீர்

*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்து*

உயர்கல்விப் பெறுபே றுகளை சமூக வலைத் தளங்களில் வெளியிடு வதை தவிர்க்கவேண் டும் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். பல மாணவர்கள் தங்கள் பரீட்சை முடிவுகளை முகநூலில் பதிவிடுவ தைப் பார்க்கிறோம்.

அந்தப் பரீட்சை எண் ணில் இருந்து வேறு ஒருவரின் விண்ணப் பம் அல்லது தேசிய அடையாள அட்டை யின் எண் எவருக்கா வது தெரிந்து அந்த விண்ணப்பத்தை நிரப் பினால், கேள்விக்கு ரிய மாணவருக்கு அதை மீண்டும் நிரப்ப இரண்டாவதுவாய்ப்புக் கிடைக்காது. இதனால் முழு கணினி செயல் முறையையும் மாற் றிய பின்னரே சட் டபூர்வ உரிமையாள ரால் இந்த அணுக லைப் பெறமுடியும்.

ஆகவே இந்தச் சிக்கல் களை கருத்திற் கொண்டு உங்களது பரீட்சைப் பெறுபேறு களை சமூக ஊடகங்க ளில் வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாதரவத்தைப் படுகொலையின் நினைவேந்தல் உணர்வுபூர்வம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் - புத்தூர் வாதரவத்தையில், இந்திய அமைதிப் படையால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் நினைவேந்தல் நிகழ்வு, நேற்று உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

1989 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் திகதி புத்தூர் - வாதரவத்தைப் பகுதியில் வைத்து ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களை அஞ்சலிக்கும் வகையிலேயே நேற்றைய நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபையின் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தலைமையில் இந்த அஞ்சலிப்பு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ம-100)

## திட்ட முன்மொழிவு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி மாவட்டத்தின் திட்டமிடல் செயலகத்தினால் மூன்றாண்டு திட்ட முன்மொழிவுக் கலந்துரையாடல் மேலதிக மாவட்ட செயலர் முரளிதரன் தலைமையில் மாவட்ட திறன் விருத்தி ஒன்று கூடல் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல்கள், நடந்து முடிந்த அபிவிருத்தித் திட்டங்கள், நடக்க இருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள், மூன்று ஆண்டுக்கான விசேட வேலைத் திட்டங்கள் போன்றவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. (ஒ-25-113)

சாவ. மருத்துவமனைக்கு

## குருதி சுத்திகரிப்பு இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு 6 கோடி ரூபா பெறுமதியான இரண்டு குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கையளிக்கப்படவுள்ளன.

கனடாவைச் சேர்ந்த செந்தில்குமாரின் நிவாரணம் அமைப்பின் பங்களிப்பில் அவை வழங்கப்படவுள்ளன.

மருத்துவமனை பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இலங்கைக்கான கனேடியத் தூதுவர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச- 9)

## மாலைதீவு மூத்த பிரஜைகளுக்கு இலங்கையில் குடியுரிமை

### மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7

மாலைதீவின் மூத்த பிரஜைகளுக்கு இலங்கையில் நிரந்தரக் குடியுரிமை வழங்குமாறு இலங்கை வந்துள்ள மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூஸா சமீர் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இந்த சந்திப்பின்போது மாலைதீவு வெளிவிவகார பிரதி அமைச்சர் ஷெரினா அப்துலும் உடனிருந்தார். இரு நாட்டு விசா நடைமுறைகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. (ஒ-6)

## கேள்விஅறிவித்தல்.
## PSDG நிதி - 2024
## துணுக்காய் பிரதேசசபை, துணுக்காய்.

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினது மாகாண சபை நிதியின் ஒரு பகுதி கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்கு பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தலைவர், பெறுகைக்குழு துணுக்காய் பிரதேசசபை. முல்லைத்தீவு. அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 4/2016(I) இலக்க 16.03.2016ம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

04. கேள்வி பெறத்குதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். அட்டவணையிற் காட்டியபடி (வீதி) பொருத்தமானதரத்தில் ICTAD/CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக் குழு. துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் (தொலைபேசி இல:-021 228 4532/ 021 228 4926 E-mail:psthunukkai@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் எனும் இடத்திலிருந்து 07.06.2024 ம் திகதியிலிருந்து 24.06.2024 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு துணுக்காய் பிரதேச சபை. துணுக்காய் எனும் முகவரிக்கு 25.06.2024 ம் திகதி மாலை 13.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்/கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்விகளானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து NP/14/44(05)/02/PSDG-01/2024, NP/14/44(05)/02/MAINT -01/2024 - 77 (எழுபத்து ஏழு) நாட்கள் (09.09.2024) . NP/14/44(05)/02/PSDG -02/2024 -63 (அறுபத்து மூன்று) நாட்கள் (26.08.2024) வரையும் செல்லுபடியாகும்.

10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்.) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(05)/02/PSDG - 01/2024 | Construction of Klvilan 3rd Link lane | 6.35Mn (வரிநீங்கலாக) | 84 நாட்கள் | C8/C7 and C6 (வீதி) | 80,000.00 | 07.10.2024 |
| NP/14/44(05)/02/PSDG - 02/2024 | Construction of Segreationcentre at Klvilan Damping ground | 2.96Mn (வரிநீங்கலாக) | 63 நாட்கள் | C9/C8 and C7 (கட்டடம்) | 45,000.00 | 22.09.2024 |
| NP/14/44(05)/02/MAINT - 01/2024 | Renovation of Mallavi Therankandal Road | 5.08Mn (வரிநீங்கலாக) | 84 நாட்கள் | C8/C7 and C6 (வீதி) | 78,000.00 | 07.10.2024 |

11. கேள்விகோரல் பற்றியமுன் கூட்டிய கூட்டம் 11.06.2024 ஆம் திகதி 14.30 மணிக்கு துணுக்காய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்துகொள்ளமுடியும்.

12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ. மீள்கேள்வி கோரவோ பெறுகைக் குழுத் தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

தலைவர்.
பெறுகைக்குழு,
துணுக்காய் பிரதேச சபை.
முல்லைத்தீவு
வடமாகாணம்
07.06.2024

(CR/42582) J-1


## கலந்துரையாடல்

'ஈழத்தமிழர் சுயநிர்ணய உரிமை தொடர்பான பொதுநிலைப்பாடும், பொதுவாக்கெடுப்பும்' கலந்துரையாடல், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.59 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையை வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தனும், தலைமையுரையை வடமாகாணசபையின் அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானமும், தொடக்கவுரையை கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீட பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளனர்.

கருத்துரைகளை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா, வடமாகாணசபையின் முன்னாள் அமைச்சர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம், சிரேஷ்ட ஊடகவியலாளர் சபாபதி சுப்பையா குகநாதன், நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நிறைவுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருதோடை கும்பாபிஷேகம்

வவுனியா, ஜூன் 7

ஓமந்தை மருதோடைப் பதியில் அமர்ந்து மக்களுக்கு அருள் பாலிக்கும் மருதோடை கந்தசாமி கோவில் போருக்குப் பின்னர் தற்போது புனராவர்த்தனம் செய்யப்பட்டு மஹாகும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று கர்மாரம்ப கிரியைகள் இடம்பெற்று நாளை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்று நாளைமறுதினம் 9ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 15 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்.

(ஒ-19)


## அறைகள் வாடகைக்கு

வதிவிட வசதி, கல்லூரி மாணவர்களுக்கு 2பேர் தங்கக்கூடிய அறை. ஆளுக்கு ரூ - 5000/-

மருத்துவ மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

தொடர்பு:- சிவா 074 089 9269

(CS/55284) J-1

## ஆசிரியர் தேவை

அரசியல், ஊடகம் நேரில் வந்து கற்பிக்க ஆசிரியர் தேவை.

தொடர்புகளுக்கு

077 927 2616

(CS/55285) J-1


ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நடராசா கோவிந்தராசா பத்தர் (கோவிந்து)



தோற்றம் 25.02.1952 — மறைவு 11.06.2021

திதி:- பிரதமை

அன்பின் திருவுருவே
எங்கள் பாசத்தின் உறைவிடமே அப்பா!
எத்தனை காலங்கள் போனாலும்
மறப்போமா உங்களை அப்பா!
எங்கள் மனதில் குடிகொண்ட தெய்வமே
உங்கள் அன்பு உருவம் என்றும் மாறாது
எம் இதயத்தில் உங்கள் நினைவுகளை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.


குடும்பத்தினர்.

021 222 3432, 021 222 5184

இல. 64 காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

(CS/55280) J-1

## விண்ணகப் பிறப்பின் 45ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



மண்ணில் 20.03.1930 — விண்ணில் 24.04.2024

### திருமதி சந்தானா இன்னேசம் செபஸ்ரியாம்பிள்ளை

(செல்வக்கண்மணி)

(ஓய்வுபெற்ற ஆசிரியர், மண்டைதீவு - மாதகல்)

அன்போடு அணைத்து அமுதூட்டி. ஆசானாய் அருகிருந்து அறிவூட்டி.
இறைவழியில் நாம் நடக்க வழிகாட்டி. ஈசன் பதமடைந்த எம் பாசமிகு அன்னையே!
உங்கள் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

எமது தாயாரின் இறப்புச் செய்தி அறிந்து நேரிலும் சமூக ஊடகங்கள் மூலமாகவும் எமது துயரில் பங்குகொண்டு ஆன்ம இளைப்பாற்றிக்காகச் செபித்த மதிப்புக்குரிய யாழ். ஆயர். அருட்தந்தையர்கள். அருட்சகோதரிகள். அவர் சேவையாற்றிய பாடசாலைச் சமூகங்கள். எமது நண்பர்கள். உறவினர்கள். அன்னாரின் பழைய மாணவர்கள். மலர் வளையங்கள். அஞ்சலிப் பதாகைகள் சமர்ப்பித்தோர். பலவழிகளிலும் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

பற்றிமா வீதி,
மாதகல்.

தகவல்:
பிள்ளைகள்

(CS/55265) J-1

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23 . 10 . 1926 — இறப்பு 22 . 05 . 1993

### அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(விவசாய நண்பன் - கைதடி கிழக்கு)

வீரகத்திப்பிள்ளையார் அருள்பாலித்து நிற்கும் கைதடி நகரில் திரு.திருமதி. வல்லிபுரம் - பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியருக்கு 23.10.1926 அன்று சிரேஷ்ட புதல்வனாக அமரர் சங்கரப்பிள்ளை அவர்கள் பிறந்தார்.

வையகம் போற்றும் விவசாய நண்பனாக வாழ்ந்த அமரர் சங்கரப்பிள்ளை அவர்கள் மனைவி சடைப்பிள்ளை, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைப் பிரிந்து 22.05.1993 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்

ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்து விட்டான்..
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம்
தந்த உம்மை
ஆண்டவன் ஏனழைத்தான்..?
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி - சடைப்பிள்ளை சங்கரப்பிள்ளை
பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(CS/55282) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 . 05 . 1967 — உதிர்வு 20 . 05 . 2023

### அமரர் அருளம்பலம் தேவகுமார்

திதி : பிரதமை

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

[illegible] கந்தோர் வீதி,
சாவகச்சேரி

குடும்பத்தினர்

(CS/55272) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சம்பிக்கவின் வழக்கில்
# பொலிஸார் மீது நடவடிக்கை; உயர்நீதிமன்றம் பரிந்துரை

கொழும்பு, ஜூன் 7

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகிய வழக்கில், வாகனத்தைச் செலுத்திய சாரதியின் மனைவி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு உயர்நீதிமன்றம் பொலிஸ் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைத்துள்ளது.

2016 ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்தது. 2019 ஆம் ஆண்டு இந்த வழக்கு விசாரணைக்காக சாரதியின் வீட்டுக்குச்சென்ற பொலிஸார் சாரதியின் மனைவி, மனைவியின் தாய், குழந்தை ஆகியோரை கைது செய்து கொழும்புக்கு அழைத்துச்சென்று 12 மணி நேரம் தடுத்து வைத்திருந்துள்ளனர். அப்போது தமக்கு உரிய கழிப்பறை வசதி செய்தி கொடுக்கப்படவில்லை எனவும், தான் தனது குழந்தைக்கு பலர் முன்னிலையில் தாய்ப்பால் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் மனுதாரரான சாரதியின் மனைவி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் என அவர் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்களடங்கிய குழு மனித உரிமைமீறலில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸார் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் இருவரையும் அவர்களது தனிப்பட்ட நிதியிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக ஆறு மாதங்களுக்குள் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது. (ஒ-25-6)



# சூரியமின்கலம் மூலம் நீர்ப்பாசனம் விசுவமடு விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 7

**சூரியமின்கலம் மூலம் ஏற்று நீர்ப்பாசனத்தைப் பெற்றுக்கொள்ள அதிகாரிகளை நடவடிக்கை எடுக்குமாறு விசுவமடு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு தொட்டியடி விவசாயிகள் விசுவமடு குளத்திலிருந்து ஏற்று நீர்ப்பாசனம் மூலம் நீரைப்பெற்று மேட்டுநிலப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். 600 ஏக்கருக்கு மேல் 210 விவசாயிகள் பயிர்ச்செய்கையை முன்னெடுத்து வருகின்றனர். தற்போது மின்சாரம் மூலம் நீரைப்பெறுகின்றமையால் அதிக பணம்செலுத்தவேண்டியுள்ளதாகவும், அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தமுடியாத நிலையுள்ளதாகவும் குறித்த ஏற்று நீர்ப்பாசனத்தை சூரியகலம் மூலம் பயன்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். சூரியமின்கலம் மூலம் நீர் கிடைக்குமாக இருந்தால் தாம் விவசாயத்தில் அதிக இலாபம் பெறமுடியும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-25-113)

# வவுனிக்குளத்துக்கு பொறியியலாளர் நியமனம்

முல்லைத்தீவு, ஜூன் 7

மிகப்பெரிய நீர்ப்பாசனக் குளமான வவுனிக்குளத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளராக எந்திரி.ச.சர்வராஜா கடந்த திங்கட்கிழமை முதல் கடமைகளைப் பொறுப்பேற்றார். 12 மிகப்பெரிய, நடுத்தரக் குளங்களைக் கொண்ட வவுனிக்குளம் பிரிவுக்கு இவரது வருகை பெரிதும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர் கடந்த காலங்களில் யாழ். நீர்ப்பாசனப் பொறியியலாளராகக் கடமை ஆற்றியுள்ளதுடன் வவுனியா பிராந்திய மற்றும் வடமாகாணப் பணிப்பாளர் அலுவலக நீர்ப்பாசனப் பொறியியலாளராகவும் கடமை ஆற்றியுள்ளார். (ஒ-25-13)



# மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 12 . 1943

மறைவு 06 . 06 . 2024

## தியாகராசா மல்லிகாதேவி

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி)**

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா மல்லிகாதேவி நேற்று (06.06.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி தியாகராசா (ஓய்வுநிலை அதிபர், யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்) வின் அன்பு மனைவியும், தி.தியாசிறீலன் (AME-EMIRATS), Dr.தி.குமணன் (ICU-& Anaethesia, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சர்மிளா (லண்டன்), Dr.K.நிருபா (OPD & ETU, ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், திவ்வியன், சிறிமாறன், சிறிமன், ஆரபி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
Dr.T.குமணன் - 077 284 9632
Dr.K.நிருபா - 076 927 9118

## Invitation for Bid ( IFB 2024)
### கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாநகர சபை
### சபை நிதி (CF) 2024 ரூ முத்திரைத் தீர்வை (SD) 2021 & 2022
### சேர்க்கை இல (Addendum No -01)

29.05.2024 திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கமைய கோரப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறித்த அட்டவணையில் குறிக்கப்பட்ட வேலைத்தொகுதியில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்படுகிறது.

01. நான்காவது (இல -04) விடயத்தில் வேலை விபரம் பின்வருமாறு மாற்றப்படுகின்றது.
02. ஏழாவது (07) விடயத்தில் குறிப்பிடப்பட்ட வேலையானது நீக்கப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வரி நீங்கலாக) | நிதி | கேள்வி செல்லுபடியாகும் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லுபடியாகும் காலம் |
| 4 | JMC/WD/CF / Package IV/ 2024 - 31 | Improvement of Kaladdy pillayar lane<br>Improvement of Araly Road 1st cross road (part)<br>Improvement of Jemma Street<br>Renovation of Drainage at Sirambiyadi, Yarl Veethy and palaly road 2nd lane | 7.910 | CF | 77 | 03.09.2024 | 84 | C7 & C6 | 80,000.00 | 01.10.2024 |

தலைவர்,
பிராந்தியப் பெறுகைகள் குழு,
யாழ்ப்பாணம் மாநகர சபை.
06.06.2024

(CR/42584) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முஸ்லிம்களின் ஆதரவும் ரணிலுக்கு இருக்கின்றது

## அசாத் சாலி கூறுகின்றார்

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் எல்லாம் தேவையில்லை. தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ரணில் பக்கமே நிற்பார்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் தொடர வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர். எனினும், இந்த வேலைத்திட்டத்தை குழப்பும் முயற்சியில் எதிரணிகள் ஈடுபட்டு வருகின்றன. இந் நாட்டிலுள்ள முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் பக்கமே உள்ளனர். தமிழ்ப் பொதுவேட்பாளர் அவசியமில்லை எனத் தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. ரணிலுக்கு ஆதரவு வழங்கப்படும் என்று சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். அவர் ஓய்வுபெற்ற நீதியரசர். நாட்டை எவரால் முன்னெடுக்கமுடியும் என்பது அவருக்குத் தெரியும். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே தலைவர் அவர்தான்- என்றார். (ஓ-44)

# ஐ.தே. கட்சியின் முடிவால் பரபரப்பு




கொழும்பு, ஜூன் 7

ஐக்கிய தேசியக் கட்சியால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலருக்கு, ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழுவில் இடமளித்தமை கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐவரடங்கிய நாடாளுமன்றக் குழுவை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு அமைத்துள்ளது என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வஜிர அபேவர்த்தன, வடிவேல் சுரேஷ், ஹரின் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார மற்றும் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுவார்கள் எனவும் அவர் கூறினார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டார செயற்பட்டுவருகின்றார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய பின்னர் உறுப்புரிமையை கட்சி இடைநிறுத்தி இருந்தது. இந்நிலையிலேயே அவருக்கு மீண்டும் கட்சி, உறுப்புரிமையை வழங்கியுள்ளது. எனினும், அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடரும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-25-44)

# மரண அறிவித்தல்



## திரு இராசு பஞ்சரட்ணம்

(காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற முகாரி (Foreman)

யாழ் கொக்குவில் கிழக்கு சேச்லேனைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு பஞ்சரட்ணம் அவர்கள் 05.06.2024 புதன்கிழமை அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு-மற்றும் பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் பானுமதி தம்பதிகளின் அன்பு மருமகனும், அமிர்தராணியின் அன்புக் கணவரும் பிரசாத் (கனடா), விஜயாளன் (லண்டன்), வைஷ்ணவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜனார்த்தகி சர்மிளா, ரமணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கிருஸ்ணகுமார்,மற்றும் கிருஸ்ணமாலாவின் அன்புச் சகோதரரும் செல்வமலர், வெற்றிவேலு ஆகியோரின் மைத்துனரும் சிந்துஜா, வினோஜா, வினோதா ஆகியோரின் பெரியப்பாவும் கேசவன், டிகேசன் ஆகியோரின் மாமனாரும் சஜித், லக்சயா, வக்ஸ்லீனா, அனன்ஜன், அனன்ஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளைமறுதினம் (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வெற்றிவேலு, மாலா, கேசவன் (077 241 2220)
உடன்பிறவாத சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1938



மறைவு 06 . 06 . 2024

## சின்னையா விஸ்வலிங்கம்

யாழ்ப்பாணம் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும், பண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா விஸ்வலிங்கம் நேற்று (06.06.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சின்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களாகிய பிரான்சிஸ் - பிரகாசியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கிறிஸ்ரீனம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களாகிய றொயஸ் சந்திரமோகன், சிறிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலிஸ்ரன் (உதவிப்பணிப்பாளர் - கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் - மன்னார்), ஜீன்ஜெஸ்மினி (ஆசிரியை யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு மாமனாரும், றொய்ஸ், ஹறிஸ் (யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள்), ஷைந்தவி (யா/வேம்படி உயர்தரப் பாடசாலை - மாணவி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.06.2024) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
கலிஸ்ரன் - மகன்
077 903 7237
070 171 0501

(CS/684) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பணிஓய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7

இசுருபாயக் கல்வி அமைச்சில் பல்வேறு பதவிநிலைகளில் சேவையாற்றிய கவிஞர் சு. முரளிதரன் இன்று வெள்ளிக்கிழமையுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

மலையகத்தைச் சேர்ந்த இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் ஆவார். விஞ்ஞானப் பட்டதாரியாகிய இவர் சிறந்த கவிஞருமாவார். குறிப்பாக இலங்கையில் ஹைக்கூ கவிதைத் துறையில் இவருக்கு தனித்த இடமுண்டு.

விஞ்ஞான ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்த இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவாகி கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் அதிபர், சிறிபாத கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி என ஆசிரிய கல்வித் துறையில் சேவையாற்றி தொடர்ந்து இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைப் பணிப்பாளர், தமிழ்ப் பாடசாலை அபிவிருத்திக்கான பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எனப் பல்வேறு பதவி நிலைகளை வகித்துள்ளார். இறுதியாக கடந்த ஏப்ரல் மாதம் முதல் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுச் சேவையாற்றி வந்தார். (ம-66)



## சமஷ்டித்...

இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று, பா.ஜ.க. கூட்டணி சார்பில் மூன்றாவது முறையாக பிரதமராகவுள்ள மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கருத்தை சி.சிறீதரன் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தாங்கள் இந்திய மக்களின் மன உணர்வுகளை வென்றிருப்பதன் பிரதிபலிப்பாகவே மக்களவைத் தேர்தலில் பெற்றிருக்கும் இந்த வெற்றி அமைந்திருக்கிறது. பாரதத்தின் அரசியல், பொருளாதார, சமூக நலன்சார்ந்து தாங்கள் ஆற்றவிருக்கும் பணிகளின் விளிம்பில், ஈழத் தமிழர்களுக்கும் இந்திய தேசத்துக்கும் இடையே இழையோடியிருக்கும் உறவின் கனதியை உயிர்ப்பிக்கவேண்டிய காலக்கடமையும் தங்களிடத்தே தரப்பட்டிருப்பதாக நாம் உணர்கிறோம்.

இலங்கைத் தீவில், ஈழத் தமிழ் மக்களுக்கென அர்த்தமுள்ளதும் அடிபணியாததுமான சமஷ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும் என்பதே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அந்தவகையில், தங்களது அனுசரணையும் அழுத்தமும் இன்றி இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமக்குரித்தான உரிமைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெறமுடியாது என்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

போருக்குப் பின்னரும் இன, மத அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் எமது மக்களின் ஆட்சி உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, எமது கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியத் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில், இந்திய மத்திய அரசு தனது முதன்மையான பணிகளை ஆற்ற முன்வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பை எமது இனத்தின் கோரிக்கையாக தங்களிடம் முன்வைக்கிறேன்.

இந்திய தேசத்தின் வரலாற்றுப் பக்கங்களில் தனித்துவம் மிக்க தலைவராக, தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் மக்கள் ஆணை பெற்று, பாரத பிரதமராக ஆட்சிபீடம் ஏறியிருக்கும் தங்களின் பணிகள், இந்திய மற்றும் ஈழ தேசங்களின் நலனுக்கான வரலாற்றுப் பணிகளாக அமையவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-26-113)

## நீதிமன்றம்...

பட்டுள்ளது. தமிழ் மீனவர்களை கோந்தைப்பிட்டி துறைமுகத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட அனுமதித்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து முஸ்லிம் மீனவர்கள் போராட்டம் நடத்தியிருந்தனர். இதன்போது நீதிமன்றத்துக்கு கல்லெறி நடத்தப்பட்டதுடன், நெருப்பும் வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதல்களில் 3 உயர் அதிகாரிகள், 6 பொலிஸார் உட்பட பல பொதுமக்கள் காயமடைந்திருந்தனர். அத்துடன் இந்தச் சம்பவம் இடம்பெற்ற போது அப்போதிருந்த நீதிவான் யூட்சனை, அமைச்சராக இருந்த றிஷாத் பதியுதீன் அச்சுறுத்தினார் எனவும் குற்றச்சாட்டப்பட்டிருந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி குணைஸ் பாரூக் மன்றில் முன்னிலையானார். சாட்சிகளின் நலனைப் பேணுவதற்காக சட்டத்தரணி க.சுகாஷ் மற்றும் சட்டத்தரணி மகேந்திரன் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

வழக்குத் தொடுநர் தரப்பினர், எழுத்து மூலமான சமர்ப்பணத்தை தாக்கல் செய்வதற்கு மேலதிகமான கால அவகாசம் கோரியமையால், தீர்ப்புக்காக நேற்றுத் திகதியிடப்பட்ட இந்த வழக்கு, அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-ஒ-27)

## யாழ்ப்பாணத்தில்...

டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது என்றும், இது பெருந்தொற்றாக உருப்பெறச் சாத்தியமுள்ளதாகவும் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி, பெப்ரவரி மாதம் வரையிலான காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று அதிகரித்திருந்தது. பின்னர் மார்ச், ஏப்ரல் மாதங்களில் டெங்குத் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும், மே மாதத்தின் மத்திய பகுதியில் நிலவிய மழையுடனான காலநிலை காரணமாக டெங்குத் தொற்று மீண்டும் தீவிரமடைந்துள்ளது.

பூச்சிகள் தொடர்பான ஆய்வில் டெங்கு நுளம்புக் குடம்பிகளின் பெருக்கம் அதிகரித்து வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், வரும் வாரங்களில் டெங்குத்தொற்று பேராபத்தானநிலையை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

யாழ்ப்பாணத்தில், யாழ்ப்பாணம் மாநகரசபை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, உடுவில் பிரதேச செயலர் பிரிவு, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு என்பவற்றில் டெங்குத் தொற்றின் தாக்கம் தீவிரமாகியுள்ளது. ஒன்றிணைந்த திட்டங்கள் மூலமே டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தமுடியும். ஆதலால், டெங்குத் தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் - என்றார். (அ-ம-20)

## கொக்குத்தொடுவாய்...

கொக்குத்தொடுவாய் புதைகுழியைப் பார்வையிட்டார். முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி மற்றும் சட்டத்தரணி க. கனேஸ்வரன் ஆகியோரிடம் புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (அ-ஒ-19)

## வெளிநாட்டு...

வேலைவாய்ப்பு மோசடிகளும், விசா மோசடிகளும் அதிகரித்து வருகின்றன. அதிலும், வெளிநாடுகளில் இருந்து வருவோரே இத்தகைய மோசடியில் அதிகம் ஈடுபட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் கிராமப்புற இளைஞர்களை இலக்கு வைத்து, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து 30 தொடக்கம் 40 இலட்சம் ரூபா வரையிலான பணமோசடிகளில் ஈடுபடுகின்றனர். அவர்களின் ஏமாற்று நாடகத்தை அறியாத அப்பாவி இளைஞர்கள் போலி வாக்குறுதிகளை நம்பி பணத்தை இழக்கின்றனர். இது தொடர்பான ஏராளமான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த வெளிநாட்டு விசா மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (அ-ம-26)

## நாகபூஷணி...

வுள்ளன. ஆலயத்தின் சப்பரத் திருவிழா எதிர்வரும்19ஆம்திகதி புதன்கிழமையும், 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும் இடம்பெற்று, 22 ஆம் திகதி சனிக்கிழமைதெப்போற்சவத்துடன்ஆலயத் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (ப-66)

## ஆலயத்தின்...

நேற்றுக்காலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த அவர், அச்சுவேலிப் பிரதேச மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரண்டு மோட்டார்சைக்கிளில் வந்த ஐவர் அடங்கிய குழுவினரே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதல்தாரிகள் தங்களின் முகங்களை துணிகளால் மூடிக்கட்டியிருந்தனர் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-66-23)

## மின்சாரசபை...

சட்டவரைவுக்கு ஆதரவாக 103 வாக்குகளும், எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிடவேண்டும், புதிய அரசாங்கத்துக்கு அதன் பொறுப்பை வழங்கவேண்டும் என கடந்த வாரம் அறிக்கை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கூட சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்தார்.

இந்த வாக்கெடுப்பை இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் புறக்கணித்திருந்தன. அதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், தேசிய காங்கிரஸ் தலைவர் அதாவுல்லா ஆகியோரும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. (அ-ஒ-இ)

## சுருக்குவலை...

கைது செய்யப்பட்ட மீனவர்கள், நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டனர். சான்றுப் பொருள்களும் நீதிமன்றத்தின் கவனத்துக்குப் பாரப்படுத்தப்பட்டதையடுத்து, சந்தேகநபர்களை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மீனவர்கள் அனைவரும் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ம-19)

## காளாஞ்சி...

ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு ஆலயச் சூழல் பராமரிப்பு, ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்களுக்கான அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்தி செய்தல், வீதித் தடைகளை அமைத்துச் சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வரும் யாழ். மாநகரசபையினருக்கு மேற்படி ஆலய சம்பிரதாய முறைப்படி காளாஞ்சியும் மஹோற்சவப் பெரு திருவிழாக்கால நாட்காட்டியும் யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரனிடம் நேற்று வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. (அ-ஒ-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக் குளத்துக்கு நிலையான பொறிமுறை

## கிளி. மாவட்ட மேலதிக செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூன் 7**

**கிளிநொச்சி மாவட்டத்துக்கு இரணைமடுக்குளம் வரப்பிரசாதமானது. இரணைமடுக்குளத்தின் நீர் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் சென்றடையாது, பரந்துபட்ட மக்களுக்கும் கிடைக்கும் வகையில் நிலையான பொறிமுறை ஏற்படுத்தப்படவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

வெளிகண்டல் பகுதியில் நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள முரண் பாட்டைத் தீர்க்கும் விசேட கலந்துரையாடலில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தின் கீழ் சிறுபோகச் செய்கை மேற்கொள்வதற்கான நிரந்தர பொறிமுறை இல்லை. வருடா வருடம் ஒவ்வொரு பிரச்சினை எழுகின்றது.

இந்த நீர்ப்பாசனத் திட்டத்துக்கான நிரந்தர பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்களம் குறிப்பிடுவது போன்று, வான் கதவுகள் திறக்கப்படும்போது அழிவுகளை சந்திப்பவர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற மனநிலை எல்லோருக்கும் உள்ளது.

இந்தச் சிறுபோகத்தின் பின்னர் இந்தப் பிரச்சினைக்கு நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் விவசாயிகளையும் உள்ளடக்கி தீர்மானம் வேண்டும்-என்றார். (ஓ-25-27)



# உறுதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை

மன்னார், ஜூன் 7

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் குடியிருப்போருக்கு, உறுதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான நிலத்தில் வசிக்கும் ஆயிரத்து 400 குடும்பங்களில், முதற்கட்டமாக 600 குடும்பங்களுக்கு காணி உறுதி வழங்குவதற்கான பணிகள், மன்னார் ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ப-60)

## அத்துமீறி மணல் அகழ்வு; 60,000 ரூபா தண்டம்


வள்ளிபுனம் காட்டினுள் அத்துமீறி மணல் அகழ்ந்த இருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

முல்லைத்தீவு வள்ளிபுனம் காட்டினுள் சட்டவிரோத மணல் அகழ்வு முன்னெடுக்கப்படுவதாக புதுக்குடியிருப்பு வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த திணைக்களத்தினர், மணல் ஏற்றிச் செல்ல பயன்படுத்திய உழவுஇயந்திரம் ஒன்றைக் கைப்பற்றியதோடு 30 மற்றும் 20 வயதான இருவரைக் கைதுசெய்தனர். இதனையடுத்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்டபொழுது சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர், 60 ஆயிரம் ரூபா தண்டத்துடன் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டதோடு, உழவு இயந்திரம் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஓ-25-125)

## சின்னம் சூட்டும் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7

கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலையின் குருளைச் சாரணர் சின்னம் சூட்டும் விழா அதிபர் க.நித்தியானந் தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஓ-25-66)



உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் மகேஷ் ஜல்தோட்ட தலைமையில் கிளிநொச்சி இயக்கச்சி நகர் பகுதி சிரமதானம் மூலம் கடந்த திங்கட்கிழமை துப்புரவு செய்யப்பட்டது. (ப-113)

**வீடு வாடகைக்கு**

சுன்னாகம் ஊரெழு மேற்கில் மாபிள் பதித்த, அட்டாச் பாத்றூம் கொமேட்டுடன் வீடு வாடகைக்கு உண்டு. (CS 690) A-1

தொடர்புக்கு: 076 4414 749

**யாழில் இருமாடி விற்பனைக்கு**

Old Park Road சுண்டிக்குளி யாழில் 2 பரப்பு 7.48 குளியில் 3243 ச.அடி

வீடு உடன் விற்பனைக்கு (CS/55288) J-1

070 257 5693, 077 661 3486

**பொருளியற் கல்லூரி**

நாவலர் வீதி யாழ்ப்பாணம் — K.K.S. வீதி சுன்னாகம்

BARATHY சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும் A/L 2023 கலை வர்த்தகப் பிரிவில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்று உங்கள் பாடசாலைக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் பெருமையீட்டித் தந்த அனைத்து மாணவர்களினையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதே போல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது.

**A/L Dayclass**

கலை, வர்த்தகம்

திங்கள்-வெள்ளி வரை

ஆரம்பம்: 10.06.2024 திங்கட்கிழமை

உங்கள் அனுமதிகளினையும் நேர அட்டவனைகளினையும் எமது மூன்று நிறுவனங்களிலும் 8.9 ஆம் திகதிகளில் சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ளவும்

A/L 2024, 2025 பிரிவு I, பிரிவு II, A/L 2026 பிரிவு I நடைபெறுகின்றன

அலுவலக தொடர்புகளுக்கு

யாழ்.நகர் : 077 220 9651
சுன்னாகம் : 075 916 0417
சித்தன்கேணி: 077 940 8682

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

பிரிவு - 53

* Diploma in English / Spoken English
* Diploma in ICT/ AI
* Diploma in Psychology & Counselling
* Diploma in Leadership & Business Management
* Diploma in Political Science

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08, 09 . 06 . 2024 - 10 . 00 Am

○ காலம் : 03 மாதங்கள் ○ சான்றிதழ் பிரிவுகள்

IPS to your Future

Thirunelvely

T.P : 074 234 9120

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்

A-9 வீதி முகப்புடன் 18 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப் பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது.

குரு: 077-029 4164
077-329 4130
077-294 1521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.